டெல்லியில் போராடும் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக BSNL ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் -25.04.2017

<<<<<<<<<<<<<<<<<<<<<<<<>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>

கடந்த 140 ஆண்டுகளில் காணாத வறட்சியை தமிழகம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. குடி நீர் பற்றாக்குறை தலைவிரித்தாடுகிறது. நிலத்தடி நீர் மட்டம் அதல பாதாளத்திற்கு சென்று விட்டது. சாகுபடி செய்த பயிர்கள் அனைத்தும் கருகி விட்டன. சொல்லொனா துயரத்தில் சிக்கிய விவசாயிகள் 400க்கும் மேற்பட்டோர் இதுவரை தற்கொலை செய்து கொண்டும் அதிர்ச்சியாலும் உயிரிழந்துள்ளனர். உலகின் பசிப்பிணி நீக்க உணவளித்த நம் விவசாயிகள் தன் நிலத்திலேயே உயிரை விட்ட பரிதாபம் அனைவரின் உள்ளத்தையும் உலுக்கிக் கொண்டுள்ளது. கடன் சுமையால் விவசாயிகளின் துயரச் சாவுகள் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. மறுபுறத்தில் விவசாயத் தொழிலாளர்களும் வாழவழியின்றி தவிக்கின்றனர். கடந்த பல மாதங்களாகவே அவர்களுக்கு விவசாய வேலை கிடைப்பதில்லை. நிவாரணம் அளிக்க வேண்டிய மத்திய, மாநில அரசுகள் குறிப்பாக மத்தியில் உள்ள மோடி தலைமையிலான மத்திய அரசு தமிழக விவசாயிகளுக்கெதிராக ஒரு வன்ம யுத்தத்தையே தொடுத்துள்ளது. வறட்சி நிவாரணம், கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அய்யாக்கண்ணு தலைமையிலான விவசாயிகள் சங்கம் தலைநகர் தில்லியில் கடந்த 38 நாட்களுக்கும் மேலாக பல்வேறு வடிவங்களில் போராட்டம் நடத்தி வருகிறது. நிர்வாணமாக தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் போராடிய பின்னரும் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தக்கூட மத்திய அரசு தயாரில்லை. தேர்தல் நடைபெற்ற உத்தரபிரதேச விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணம் வழங்கிய மத்திய அரசு நமது தமிழக விவசாயிகளை வஞ்சிப்பது கொடுமையிலும் கொடுமை.

இந்த பின்னணியில் போராடும் விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தியும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் ஏப்ரல் 25ஆம் தேதி தமிழகம் முழுவதும் பொது வேலைநிறுத்தம் நடத்த அனைத்துக் கட்சிகளும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதே நாளில் புதுவையிலும் பொது வேலைநிறுத்தம் நடத்துவது என்றும் அந்த மாநிலத்தைச் சேர்ந்த கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

உலகிற்கு சோறிடும் தமிழக விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழக BSNL ஊழியர்களும் களமிறங்க வேண்டியது நமது தார்மீக கடமை. தமிழகம் மற்றும் புதுவையில் பொது வேலை நிறுத்தம் நடைபெறும் 25.04.2017 அன்று அனைத்து கிளைகளிலும் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடத்துவது என அனைத்து சங்கங்களும் முடிவெடுத்துள்ளன.

எனவே அனைத்து கிளைகளிலும் நமது தோழர்கள் 25.04.2017 அன்று சக்தி வாய்ந்த ஆர்பாட்டங்களை நடத்தி டெல்லியில் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவளித்திட வேண்டும் என தமிழ் மாநில சங்கங்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

BSNLEU NFTE TEPU SEWA-BSNL

தமிழ் மாநில சங்கங்கள்